# சாலை விபத்துக்களுக்கான காரணம் யார்?



சாலை விபத்துக்கள் இன்று செய்திதாள்களின் இன்றியமையாத ஒரு பகுதியாக ஆகிவிட்டன. சாலை விபத்துக்களை தடுக்க அரசு சட்டம் கொண்டு வருகிறது. பெரும் விபத்துக்கள் நடக்கும் போது மட்டும் அது கடுமையாக அனுசரிக்கப்படுகிறது. பின்பு அது மக்களுக்கும் சரி அரசு துறைகளுக்கும் சரி மறந்துவிடுகிறது.

என்ன செய்யலாம் என்று யாரைக் கேட்டாலும், யாருங்க ஒழுங்கா சாலை விதிகளை பின்பற்றுகிறார்கள் என்று பிறரை குறை சொல்வதிலேயே பயணத்தை தொடர்கிறோம். விபத்து நமக்கு வந்தால்! என்ற எண்ணம் தோன்றுவதில்லை நம்மில் பலருக்கு.

நான் இன்று முதல் முடிந்தவரை சாலை விதிகளை பின்பற்றுவேன் என்னும் உறுதியை, நெடுஞ்சாலைப் பொறியாளர்கள் நாம் ஏற்க வேண்டும்.

சொல்வது மிகவும் சுலபம் என்று நீங்கள் சொல்வது புரிகிறது.

இரு சக்கர வாகனம் ஓட்டும் போது செல் போன் வந்தால் வாகனத்தை நிறுத்தி பேசவேண்டும் என்கிறது சட்டம்.

இதற்கு பெரும்பாலும் மக்கள் கூறும் பதில்கள்:

- நான் மெதுவாக ஓட்டிக்கொண்டுதான் பேசுவேன்.
- நின்று பேசினால் செல்லும் இடத்திற்கு சரியான நேரத்தில் செல்ல முடியாது.
- நான் இருசக்கர வாகனம் ஓட்டுவதில் பல ஆண்டுகள் அனுபவம் பெற்றவன் போன்றவை.

இன்று நடக்கும் சாலை விபத்துகளில் நாற்பது சதம் விபத்துக்கள் இரு சக்கர வாகனங்களால் நிகழ்பவை.

இருசக்கர வாகன ஓட்டிகள் செய்யும் பொதுவான தவறுகள்

- ✓ செல்போன் பேசிக்கொண்டு ஓட்டுவது.
- ✓ இருவருக்கும் அதிகமாக செல்வது.
- ✓ Indicator அல்லது கை சைகை காட்டாமல் திடீரென வாகனத்தை திருப்புவது. (பெரும்பாலும் பெட்ரோல் நிரப்பும் பகுதியில் நடக்கும் விபத்துக்கள்.)

- ✓ ஹெட்போன் அணிந்து பாடல் கேட்டுக்கொண்டே ஓட்டுவது.
- ✓ ஹெல்மெட் அணியாமல் செல்வது.
- ✓ இரவு நேரங்களில் முன் விளக்கோ பின் சிவப்பு விளக்கோ இன்றி ஓட்டுவது.
- ✓ நோ என்ட்ரி பகுதியில் வேகமாக கடந்து செல்வது.
- ✓ சிக்னல் சிவப்பு விளக்கை காட்டும் முன் கடந்துவிட வேண்டும் என்று விரைந்து செல்வது.
- ✓ இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு என்று தனியாக சாலை ஓரத்தில் போடப்பட்டுள்ள வெள்ளை கோட்டிற்குள் செல்லாமல் கனரக வாகனங்கள் செல்லும் பாதையில் செல்வது.
- ✓ நான்கு வழிச் சாலைகளை கடக்கும் முன் இருபுறமும் வரும் வாகனங்கள் அதிவேகமாக வரும் வாகனங்கள் என்று தெரியாமல் கடப்பது.
- ✓ குடி போதையில் வாகனம் ஓட்டுவது.
- ✓ முறையான பயிற்சியின்றி வாகனம் ஓட்டுவது.
- ✓ 18 வயது மிகாத குழந்தைகளிடம் வாகனங்களை கொடுத்து ஓட்டச் செய்வது.
- ✓ ஓட்டுநர் உரிமமின்றி வாகனங்களை ஓட்டுவது.

மேற்கூறிய காரணங்களில் பல நமக்கு தவறாகவே தெரிவதில்லை. தெரிந்தாலும் வேறு வழி இல்லை இரண்டு குழந்தைகளை பள்ளியில் விடுவதற்கு மூன்று பேர் சென்றாக வேண்டியுள்ளது. ஆட்டோவில் சென்றால் செலவு அதிகமாகும் என காரணங்கள் பல.

சரி மூன்று பேராக செல்வதை தவிர்க்க முடியாத சில நேரங்களில் செல்லும்போது கவனமாகவும் மெதுவாகவும் செல்லலாமே. அதற்கும் பள்ளிக்கு நேரம் ஆகிவிட்டது அலுவலகத்திற்கு நேரம் ஆகிவிட்டது என காரணங்களை அடுக்கிக் கொண்டே விபத்துக்களை சந்திக்கின்றோம்.

பள்ளிக்கு தாமதமாக சென்றால் ஆசிரியர் அடிப்பார். அலுவலகத்திற்கு தாமதமாக சென்றால் உயர் அதிகாரி கடிப்பார். ஆனால் விபத்து நடந்து உயிரே போய்விட்டால்? உங்கள் அலுவலகமோ பள்ளியோ உங்களையோ உங்கள் குடும்பத்தையோ காப்பாற்றக் கூடுமோ. பல குடும்பங்கள் விபத்தில் காயம் அடைந்தவரை காப்பாற்றும் முயற்சியில் குடும்ப சொத்தை எல்லாம் இழந்து வாடுவதை காண்கிறோம்.

மிக சிரமம் தான் முயன்று பாருங்கள் முடியும்.

சற்று முன்னரே கிளம்புங்கள். திருமணத்திற்கு சரியான நேரத்திற்கு செல்ல முடியவில்லையே. பேருந்தை தவற விட்டு விடுவோமே என்று ஓடும் பேருந்தில் ஏறுவது போன்ற தவறுகளை செய்கிறோம். தாமதமாகிவிட்டதா? பரவாயில்லை திட்டு வாங்குவீர்களா பரவாயில்லை. 17பி போடுவேன் என்கிறாரா உங்கள் உயர் அதிகாரி. பரவாயில்லை.

இவற்றுக்கெல்லாம் பரிகாரம் இருக்கிறது ஆனால் உடல் ஊனமோ உயிர் இழப்போ நேர்ந்தால் நினைத்து பாருங்கள்.

மரணம் அடைபவர் புண்ணியம் செய்தவர் ஆகிவிடுவார். அவரை சார்ந்து இருக்கிற குடும்பம் பாவம் செய்த குடும்பமாகிவிடும்.

நம் துறையில உள்ள ஈப்பு ஓட்டுனர்கள் பலரைப் பார்த்து இருக்கிறேன். ஒன் வேயில் செல்வது. நோ பார்க்கிங்கில் அரசு வாகனத்ததை நிறுத்துவது. சாலையின் நடுவிலேயே வாகனத்தை நிறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுவதை பார்த்திருக்கிறேன். கேட்டால் அய்யா இது நம் சாலை நாம் தானே எல்லாம் என்பார்கள். அது தவறு என சுட்டிக்காட்டி சாலை ஓரத்தில் நிறுத்தக்கூறுவேன்.

மேலே சொன்ன தவறுகளை நீங்களும் இதுவரை செய்து இருக்கலாம். இனி செய்யாதீர்கள். ஹெல்மெட் அணிவது எரிச்சலாக இருக்கலாம் பல விபத்துகளில் ஹெல்மெட் அணிந்து இருந்தால் உயிர் பிழைத்து இருக்கலாம் என கூறக் கேட்கிறோம். நாம் சரியாக சென்றாலும் மற்றவர்கள் தவறுகளால் விபத்து நேர்கிறதே என விதண்டாவாதம் செய்யாதீர்கள். உங்கள் குழந்தையை, மனைவியை ஒரு வினாடி நினைத்துப் பாருங்கள். எரிச்சலாக தோன்றும் ஹெல்மெட் வசதியாக தோன்றும். வேகமாக செல்லும் வாகனத்தின் வேகம் தானாகவே குறையும்.

நான் மேற்கண்ட தவறுகளை தவிர்ப்பேன் என உறுதியாக உள்ளேன்.

நீங்களும் முயன்று பாருங்கள். நாட்டின் விபத்து எண்ணிக்கை உங்களால் கூடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**பழி விட்டால் சாலை விதிகள் நமக்கு தடையாக தெரியாது. நம்மால் முடியும்.**

இந்த கருத்துக்கள் உங்கள் உள்ளத்தில் சிறு மாற்றத்தை ஏற்படுத்தினாலும் அது நாட்டுக்கும் வீட்டுக்கும் நீங்கள் செய்யும் பேருதவி.

1993 முதல் 2010 வரையிலான விபத்துக்கள் குறித்த விவரங்கள்

NUMBER OF ROAD ACCIDENTS ACCORDING TO TYPE OF VEHICLES
DURING THE YEAR 2010

TAMIL NADU

| Types of Vehicles | Fatal | | Grevious Injury | | Minor injury | | Non-injury | Total Accidents |
|---|---|---|---|---|---|---|---|---|
| | N.A | N.P.K | N.A | N.P.I | N.A | N.P.I | N.A | |
| Bus : GOVT | 1417 | 1550 | 324 | 465 | 2908 | 5914 | 249 | **4898** |
| : PRIVATE | 884 | 1003 | 294 | 553 | 2555 | 5512 | 259 | **3992** |
| Truck / Lorry | 2761 | 3105 | 704 | 1080 | 5969 | 10143 | 1278 | **10712** |
| Car / Jeep / Taxi / Tempo | 3289 | 3651 | 1277 | 2063 | 12051 | 21139 | 1421 | **18038** |
| Two wheelers | 3703 | 3835 | 1408 | 1837 | 13699 | 17842 | 276 | **19086** |
| Three wheelers | 453 | 474 | 289 | 447 | 2890 | 4836 | 145 | **3777** |
| Others | 1734 | 1791 | 317 | 399 | 2248 | 3215 | 194 | **4493** |
| Total | **14241** | **15409** | **4613** | **6844** | **42320** | **68601** | **3822** | **64996** |

## ACCIDENT DETAILS IN TAMIL NADU FOR CERTAIN YEARS

State : TAMIL NADU

| YEAR | Fatal | | Grevious Injury | | Minor injury | | Non-injury | Total Accidents | TOTAL NO.OF PERSONS INVOLVED |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | N.A | N.P.K | N.A | N.P.I | N.A | N.P.I | N.A | | |
| **1993** | 6528 | 7349 | 3562 | 5100 | 17957 | 27226 | 6878 | **34925** | **39675** |
| **1994** | 7027 | 7798 | 4199 | 6091 | 18950 | 28789 | 6861 | **37037** | **42678** |
| **1995** | 7974 | 8773 | 4440 | 6380 | 21661 | 31922 | 7610 | **41685** | **47075** |
| **1996** | 8079 | 9028 | 4474 | 7383 | 22151 | 31198 | 7493 | **42197** | **47609** |
| **1997** | 7947 | 8755 | 4542 | 6567 | 23362 | 34010 | 8352 | **44203** | **49332** |
| **1998** | 8510 | 9801 | 6562 | 8525 | 23862 | 33970 | 7789 | **46723** | **52296** |
| **1999** | 8734 | 9653 | 5276 | 7287 | 27231 | 34157 | 6845 | **48086** | **51097** |
| **2000** | 8269 | 9300 | 5278 | 8496 | 29137 | 44910 | 6239 | **48923** | **62706** |
| **2001** | 8579 | 9571 | 5442 | 8354 | 30963 | 45928 | 6994 | **51978** | **63853** |
| **2002** | 9012 | 9939 | 5830 | 8697 | 32183 | 46433 | 6478 | **53503** | **65069** |
| **2003** | 8393 | 9275 | 5163 | 8557 | 31600 | 46685 | 5869 | **51025** | **64517** |
| **2004** | 8733 | 9507 | 4875 | 7642 | 33222 | 49641 | 5678 | **52508** | **66790** |
| **2005** | 8844 | 9760 | 5214 | 7815 | 34669 | 54152 | 5151 | **53878** | **71727** |
| **2006** | 10055 | 11009 | 4630 | 6833 | 36262 | 57508 | 4198 | **55145** | **75350** |
| **2007** | 11034 | 12036 | 4498 | 6873 | 39494 | 64226 | 4114 | **59140** | **83135** |
| **2008** | 11813 | 12784 | 4426 | 6696 | 39193 | 63555 | 4977 | **60409** | **83035** |
| **2009** | 12727 | 13746 | 4448 | 6721 | 39676 | 63783 | 3943 | **60794** | **84250** |
| **2010** | 14241 | 15409 | 4613 | 6844 | 42320 | 68601 | 3822 | **64996** | **90854** |

N A : No of Accidents N P K : No of persons killed N P I : No of persons Injured

NUMBER OF ROAD ACCIDENTS ACCORDING TO TYPE OF VEHICLES
DURING THE YEAR 2010

CHENNAI CITY

| Types of Vehicles | Fatal | | Grevious Injury | | Minor injury | | Non-injury | Total Accidents |
|---|---|---|---|---|---|---|---|---|
| | N.A | N.P.K | N.A | N.P.I | N.A | N.P.I | N.A | |
| Bus : GOVT | 79 | 82 | 76 | 88 | 110 | 141 | 59 | **324** |
| : PRIVATE | 12 | 12 | 21 | 24 | 33 | 40 | 20 | **86** |
| Truck / Lorry | 99 | 106 | 124 | 139 | 158 | 185 | 193 | **574** |
| Car / Jeep / Taxi / Tempo | 130 | 134 | 534 | 637 | 744 | 919 | 426 | **1834** |
| Two wheelers | 155 | 156 | 523 | 617 | 770 | 893 | 58 | **1506** |
| Three wheelers | 27 | 27 | 170 | 219 | 260 | 323 | 49 | **506** |
| Others | 102 | 104 | 22 | 25 | 152 | 163 | 27 | **303** |
| Total | **604** | **621** | **1470** | **1749** | **2227** | **2664** | **832** | **5133** |

NUMBER OF ROAD ACCIDENTS ACCORDING TO TYPE OF ROADS

| Types of Roads | Fatal | | Grevious Injury | | Minor injury | | Non- | Total Accidents |
|---|---|---|---|---|---|---|---|---|
| | N.A | N.P.K | N.A | N.P.I | N.A | N.P.I | N.A | |
| National Highways | 131 | 136 | 284 | 342 | 484 | 584 | 254 | **1153** |
| State Highways | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| Other Dist. Roads | 473 | 485 | 1186 | 1407 | 1743 | 2080 | 578 | **3980** |
| Other Village Roads | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| Total | **604** | **621** | **1470** | **1749** | **2227** | **2664** | **832** | **5133** |

NUMBER OF ROAD ACCIDENTS ACCORDING TO CAUSES

| Types of Causes | Fatal | | Grevious Injury | | Minor injury | | Non- | Total Accidents |
|---|---|---|---|---|---|---|---|---|
| | N.A | N.P.K | N.A | N.P.I | N.A | N.P.I | N.A | |
| Fault of Driver | 581 | 598 | 1467 | 1746 | 2190 | 2626 | 831 | **5069** |
| Fault of Passenger Other than Driver | 19 | 19 | 3 | 3 | 31 | 32 | 0 | **53** |
| Fault of Pedestrian | 4 | 4 | 0 | 0 | 4 | 4 | 0 | **8** |
| Fault of Mechanical Defect | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| Bad Road | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| Bad Weather | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| Others | 0 | 0 | 0 | 0 | 2 | 2 | 1 | **3** |
| Total | **604** | **621** | **1470** | **1749** | **2227** | **2664** | **832** | **5133** |

N A-NO. OF ACCIDENTS. N P K - NO. OF PERSONS KILLED. N P I - NO. OF PERSONS INJURED

Source: DGP, SCRB, Chennai

அன்புடன்,
பொறி.கா.மனுநீதி பி.இ.,எம்.பி.ஏ.,
உதவிக் கோட்டப் பொறியாளர்.